செய்தி வெளியீடு எண்: 954 நாள்: 28.10.2010

## கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்றோர் நிலுவையைத் திருப்பிச் செலுத்துவதற்கான சலுகைத் திட்டத்தில் கால அவகாசம் 2011 ஜூன் வரை நீட்டிப்பு!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

நகர்ப்புற மற்றும் கிராமிய வீட்டுவசதித் திட்டங்களின்கீழ் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் வீடுகள் கட்டுவதற்காகக் கடன்கள் பெற்றிருந்த, பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர், குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருவாய்ப் பிரிவினர், உயர் வருவாய்ப் பிரிவினர் ஆகியோர் 31.3.2008 வரை நிலுவையில் இருந்த கடன்களைத் திருப்பி செலுத்துவதற்காகப் பல்வேறு சலுகைகளை வழங்கி முதலமைச்சர் கலைஞர் ஏற்கனவே ஆணையிட்டிருந்தார்.

அதாவது, நலிவுற்ற பிரிவினர் செலுத்த வேண்டிய 25 ஆயிரம் ரூபாய் வரையான அசல், வட்டி, அபராத வட்டி ஆகியவற்றை முழுவதுமாகத் தள்ளுபடி செய்தும்;

குறைந்த வருவாய்ப் பிரிவினர் செலுத்த வேண்டிய அசல் தொகையுடன் வட்டியில் 50 விழுக்காடு தொகை;

நடுத்தர வருவாய்ப் பிரிவினர் செலுத்த வேண்டிய அசல் தொகையுடன் வட்டியில் 75 விழுக்காடு தொகை;

உயர்வருவாய்ப் பிரிவினர் செலுத்தவேண்டிய அசல் தொகையுடன் வட்டியில் 90 விழுக்காடு தொகை;

ஆகியவற்றை 30.9.2008க்குள் திருப்பிச் செலுத்தினால், அவர்கள் செலுத்த வேண்டிய எஞ்சிய வட்டித் தொகையும், அபராத வட்டித் தொகையும் தள்ளுபடி செய்யப்படும் என்றும்; முதலமைச்சர் கலைஞர் ஏற்கனவே ஆணையிட்டிருந்தார். பின்னர், அச்சலுகை 31.12.2008 வரையும், 31.3.2009 வரையும் இருமுறை நீட்டித்து ஆணையிடப்பட்டது.

அந்த ஆணைகளைத் தொடர்ந்து, மேலும் பலர் பயனடையும் வகையில், இத்திட்டத்தில் அளிக்கப்படும் சலுகைகளை 30.6.2011 வரை நீட்டித்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு:–

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9